மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒட்டியெல்லாம் போகக்கூடாது. பதில் இருக்காது. அமைச்சரிடம் பதில் இருக்காது. தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் இருக்கும்.

வினா எண் 2, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

2—

திட்ட மதிப்பீடு

***7419—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்த விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள நிதி நிலையின் காரணமாக புதிய அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது. எனவே, பவானிசாகர் தொகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு புதிதாகக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பவானிசாகர் தொகுதி என்பது பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். மேலும் உயர்மட்டக் கல்வி பெற வேண்டுமெனில்; தொலைவில் உள்ள கோபிசெட்டிப்பாளையத்திற்கு சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. பல ஆண்டுகாலமாக எனது தொகுதி மக்கள் கல்லூரி வேண்டுமென போராடி வருகிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மறுபரிசீலனை செய்து

அடுத்த ஆண்டாவது கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய நிதி நிலை சீரமைக்கப்பட்டு, அந்த அளவிற்குப் பணம் பெறப்பட்டால், அந்தக் கோரிக்கை மறுபரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன், பவானிசாகரைப் பற்றியா?

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஆமாம். பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருவது இல்லை என்ற முறையிலே பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் self-financing கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்பதாகத் தெரிகிறது. அந்த முறையிலே ஏதாவது மாறுதல் அரசு கொள்கையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரி தொடங்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பினார்கள். சுயநிதிக் கல்லூரியைத் தொடங்க முன்வருபவர்கள், அவர்கள் விண்ணப்பம் செய்தால் அது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுயநிதிக் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்தால் அனுமதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது, கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கான வாய்ப்பில்லை என்று சொல்லப்படுகிறதே, இது இப்படியே போகும்பட்சத்தில் கல்வியே தனியார்மயமாகி விடுகிற ஓர் அபாயம் இருக்கிறது. இதன் மூலமாக ஏழையெளியவர்கள் படிப்பதற்கு கல்விக் கட்டணம் மிக அதிகமாக இருக்கிற காரணத்தாலே பாதிக்கப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, அரசு அந்தக் கொள்கை நிலையிலிருந்து மாறி, அரசே ஏற்று, கல்லூரிகளைத் திறப்பதற்கான முயற்சியை எடுக்குமா? அதோடு பல கல்லூரிகளுக்கு புதிய பாடத் திட்டங்கள் இன்னும் அளிக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் புதிய

பாடத் திட்டங்களையும் அளிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குப் போதிய அளவிற்கு நிதி வருமானத்தைப் பெறும் வகையில் இதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

3—

செயற்கைக்கோள் தரை நிலையம்

***23782—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் செயற்கைக்கோள் தரை நிலையம் ஒன்று கோயம்புத்தூரில் விரைவில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

. கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் - Satellite Earth Stations - இரண்டு, கோயம்புத்தூரில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுபோல் மதுரை, திருச்சி மற்றும் திருநெல்வேலியிலும் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 10—10

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் கணினி மென்பொருள் உற்பத்தியானது,